(எ) தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2023), மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், பேசுங்கள்.

பிற்பகல் 2–10

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பாதுகாப்பு மண்டலம் அறிவிக்கப்பட்ட கடந்தகால ஆட்சியில், தஞ்சை டெல்டா மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற கடலூர் மாவட்டம் முழுவதையும் இணைத்துக் கொள்ளாமல், சில ஒன்றியங்களை மட்டும் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக வீராணம் ஏரி என்பது டெல்டா மாவட்டத்தின் மிகப் பெரிய ஓர் அங்கமாகும். அதன் தொடர்ச்சியாக இருக்கின்ற பெருமாள் ஏரி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் வருகிறது; அதுவும் டெல்டா மாவட்டத்தின் ஓர் அங்கமாகும். ஆக, இந்தப் பெரும் நிலப்பரப்புகளை உள்ளடக்கிய விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்ற இந்தப் பகுதிகளைத் தவிர்த்து, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் அறிவிக்கப்பட்ட காரணத்தினால், இந்தப் பகுதிகள் பல்வேறு நாசகர, மோசகர திட்டங்களால் கடந்த

@ 11-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. தி. வேல்முருகன்] [2023 அக்டோபர் 11

ஆட்சியில் பாதிப்புகளை சந்தித்திருக்கின்றன. டெல்டா மாவட்டத்திற்குச் சொந்தக்காரரான எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், எனது சொந்த மாவட்டத்தில் அமைச்சராக இருக்கின்ற எங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் நான் வேண்டுவது, டெல்டா மாவட்டங்கள் என்ற வரையறைக்குள் எங்கள் கடலூர் மாவட்டத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும். புதிதாகப் பிரிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தையும் இணைத்து இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற கடலூர், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களையும் உள்ளடக்கி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக எதிர்காலத்தில் அதற்குரிய சட்டத்திருத்தங்களைக் கொண்டுவந்து இந்த மாவட்டங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளையும் முன்வைத்து, மயிலாடுதுறை மாவட்டம் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் இணைத்துக்கொள்ளப்படும், புதிதாகச் சேர்க்கப்படும் என்ற இந்த நிகழ்வை, தமிழக அரசின் இந்த முடிவை மனதார வரவேற்று நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமான இந்த முன்னெடுப்பை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அதே சமயத்தில், ஏற்கெனவே காட்டுமன்னார்கோவில் வட்டம் என்பது பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் இருந்தது. காட்டுமன்னார்கோவில் வட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம் என இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு, திருமுட்டம் பகுதி என்பது வேளாண் மண்டலத்திலிருந்து விலகி நிற்கிறது. ஆகவே, அதையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்ற கவனத்தை, மாண்பமை அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக வேண்டுகோளாக முன்வைக்கிறேன். இதுதொடர்பாக அனைத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2023), மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

@ 10-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.